**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 175/2023**
**Dated :29.04.2026**
**Deposition of witness for : P.W.5**

**List of Witness LW7 Examined as PW5 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | பொன்னமராவதி |
| கிராமம் | : | காரையூர் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent. Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(3 ஆம் ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது காரையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.01.2023 ஆம் தேதி, ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று, அங்கு வழக்கு சம்பவத்தில் காயமுற்ற, சிகிச்சையில் இருந்த சொக்கநாதன்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மனைவி சகுந்தலா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் 3/2023 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 336, 354, 506(2) IPC -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (மேற்படி முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

2) பின்னர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 06.01.2023 ஆம் தேதி, மதியம் 03.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சிவசாமி மற்றும் கருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(**மேற்படி மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.4** மற்றும் பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் சகுந்தலா, அழகர்சாமி, ராமசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் கடந்த 19.01.2023

ஆம் தேதி மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.மனு எண் 171/2023 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து, உரிய பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் அவர்களை வழக்கில் கைது செய்யவில்லை.

4) பின்னர் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1-க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். **(**மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ**.**சா**.**ஆ**. 6** மற்றும் அ**.**சா**.**ஆ**. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**

5) பின்னர், இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 294(b), 336, 354, 506(2) இதச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வழக்கின் புகார்தாரர் பெயர் சகுந்தலா என்றால் சரிதான். அவர் சொக்கநாதன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 05.01.2023 என்றாலும் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது 06.01.2023 என்றாலும் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சுமார் 1/2 மணி நேரம் ஆகும். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்தது என்று எனது விசாரணை அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் 1 வது எதிரி வீட்டு வாசல் என்றால் சரியல்ல. கொல்லையில் போடப்பட்டிருந்த சிறிய வீட்டின் அருகே சம்பவம் நடந்தது.

2) அதே தேதியில் 1 ஆம் எதிரி சாட்சி சகுந்தலா மற்றும் மலர்விழி, சிவகாமி, கண்ணகி ஆகியோர் மீது புகார் அளித்து இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் சிவகாமி மற்றும் மலர்விழி ஆகியோர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. சாட்சிகள் அழகர்சாமி, ராமசாமி ஆகியோருக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியும் என புகார் வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி கருப்பையா அ.சா.1-ன் கணவர் என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் அ.சா.1ன் ஊர்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் ஊர்காரர்கள் ஆவார்கள். உறவினர்களா என்று தெரியவில்லை. அ.சா.1 க்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. உட்புற காயம் இருந்தது. உட்புறம் காயம் இருந்ததாக அவர் பொய்யாக சொல்லலாம் என்றால் அதனை மருத்துவர் தான் சொல்ல வேண்டும். இவ்வழக்கில் தடய பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின்ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல, சொன்ன தேதியில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும் நான் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.29 16:40:13 +0530

நா.சிவழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.